## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) 2018ம் ஆண்டிற்கான சியோல் அமைதிப் பரிசை வென்ற இந்தியர் யார்? [2018 Seoul Peace Prize]

A] சுஷ்மா சுவராஜ்

B] நரேந்திர மோடி

C] மன்மோகன் சிங்

D] மனோகர் பாரிக்கர்

- ✓ சர்வதேச கூட்டுறவு மற்றும் உலக பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பை ஆற்றியதால் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு சியோல் அமைதி பரிசு கடந்த பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி வழங்கப்பட்டது.
- ✓ ஏழை மற்றும் பணக்காரர்கள் இடையே நிகழும் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறைத்தமையால் "மோடிநாமிக்ஸ்" என்ற கௌரவம் வழங்கப்பட்டது.
- ✓ மேலும் பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதியை உயிர்ப்பான பல கொள்கைகளின் மூலம் உலகம் முழுவதும் பரவச் செய்ததால் இந்தப் பரிசு அவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- ✓ இந்த பரிசானது சியோலில் நடைபெற்ற மிகப் பெரிய விழாவில் வழங்கப்பட்டது. பிரதமர் மோடி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை ஒரு குறும்படமாக அந்த நிகழ்ச்சியில் திரையிடப்பட்டது.
- ✓ இந்தப் பரிசின் மூலம் கிடைத்த 200000 டாலர் தொகையை "நமாமி தூய்மை கங்கை" திட்டத்திற்காக மோடி வழங்கினார். இந்தத் திட்டத்தின் நோக்கம் கங்கை நதியை தூய்மைப்படுத்திப் பாதுகாப்பதாகும்.
- ✓ 14 ஆவது சியோல் அமைதிப் பரிசை மோடி பெற்றார். இதற்கு முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் கோபி அனன் ,ஜெர்மனை சேர்ந்த ஏஞ்சலா மெக்கல் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த செயல்பாட்டாளர்கள் இந்த பரிசை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2) Aero India show 2019- பன்னிரண்டாவது ஏரோ இந்தியா கண்காட்சி எந்த நகரத்தில் நடைபெற்றது?

A] பெங்களூரு

B] கொல்கத்தா

C] சென்னை

D] கொச்சி

- ✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் விமானம் மற்றும் விமான போக்குவரத்து கண்காட்சியான "ஏரோ இந்தியா 2019" கடந்த பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் பெங்களூருவில் உள்ள எலஹாங்கா விமான படை தளத்தில் தொடங்கிவைக்கப்பட்டது.
- ✓ முப்படைகளின் தளபதிகளான பி எஸ் தனோா, சுனில் லண்பா மற்றும் பிபின் ராவத் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
- ✓ 5 நாட்கள் நடைபெற்ற இந்த கண்காட்சியின் கருப்பொருளாக "பில்லியன் வாய்ப்புகளுக்கான ஓடுபாதை" **(The runway to a billion opportunities)** என்பதாகும். இந்தியாவின் விமானப்படையில் உள்ள வாய்ப்புகளை வெளி உலகுக்கு எடுத்துக்காட்டும் விதமாக இந்த கண்காட்சி நடைபெற்றது.
- ✓ மொத்தமாக 403 கம்பெனிகள் இந்த கண்காட்சிக்கு பதிவு செய்திருந்தனர். அதில் 238 இந்திய நிறுவனங்களும் 165 வெளிநாட்டு நிறுவனங்களும் ஆகும்.
- ✓ 60க்கும் மேற்பட்ட விமானங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. இவற்றுள் ரஃபேல் ஜெட் போர் விமானங்கள், **Boeing planes**, ஏர்பஸ் **A380**, சூப்பர் ஹெர்குலஸ் மற்றும் **hall's light weight helicopter** இவற்றுள் அடங்கும். ஏரோ இந்தியா 2019 கண்காட்சியின் லோகோ தேஜாஸ் **light combat aircraft** வை பார்த்து வடிவமைக்கப்பட்டதாகும்.

**3) 16ஆவது ரஷ்யா - இந்தியா - சீனா வெளிநாட்டு அமைச்சர்களுக்கான கலந்துரையாடல் எங்கே நடைபெற உள்ளது?**

A] ஷாங்காய் **(Shanghai)**

B] மாஸ்கோ **(Moscow)**

C] ஊசன் **(Wuzhen)**

D] புதுடில்லி **(New Delhi)**

- ✓ 16ஆவது ரஷ்யா- இந்தியா - சீனா வெளிநாட்டு அமைச்சர்களுக்கான மாநாடு சீனாவின் கிழக்கு ஜெய்ஜீங் மாகாணத்தில் உள்ள ஊசன் என்னும் நகரத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் தேதி நடைபெற்றது.
- ✓ இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இதில் கலந்துகொண்டார்.

- ✓ மேலும் இவருடன் பிற வெளிநாட்டு அமைச்சர்களான வாங் யி மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சரான செர்ஜி லாவ்ரோவ் கலந்து கொன்டார்.
- ✓ மூன்று நாட்டு அமைச்சர்களும் உலகளாவிய பிரச்சனைகளையும் பிராந்திய வளர்ச்சி, தீவிரவாதம் மற்றும் பிற உலகளாவிய சவால்களையும் கலந்துரையாடினர்.
- ✓ கடந்த பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி பாகிஸ்தானை தலைமை இடமாகக் கொண்ட ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத குழுவினர் புல்வாமாவில் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவும் சீனாவும் சந்தித்து பேசுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.
- ✓ இந்த நிகழ்ச்சிக்கான தங்களது வருத்தத்தை சீனா பதிவு செய்திருந்தாலும் ஜெய்ஷ்-இ-முகமது தலைவனான மசூத் அசாரை உலகளாவிய தீவிரவாதியாக அறிவிக்கும் ஐக்கிய நாடுகள்- 1267 கமிட்டியின் ஒப்பந்தத்தில் சீனா பின்வாங்கியுள்ளது.
- ✓ முன்னதாக இதே கலந்துரையாடல் கடந்த 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி புது தில்லியில் நடைபெற்றது.

**4) நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பிசிசிஐ (BCCI)ன் முதல் Ombudsman யார்?**

A] டி கே ஜெயின்

B] அனில் சிங்

C] ஜிதேந்திர குமார்

D] ரவீஸ் குப்தா

- ✓ உச்ச நீதிமன்றத்தால் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியான டி கே ஜெயினை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பிசிசிஐ கான முதல் ஓம்பட்ஸ் மேனாக (Ombudsman) நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ மாநில கிரிக்கெட் அசோசியேஷன் உடனான பிரச்சனைகளையும் பிற நிதி பிரச்சனைகளையும் விளையாட்டு வீரர்களுக்காக தீர்த்து வைப்பதே இவரது பணியாகும்.
- ✓ இவர் மும்பையில் உள்ள board of control for cricket in india தலைமை இடத்தில் விசாரணைகளை நடத்த வேண்டும். பிசிசிஐ சட்டத்தின் நாற்பதாவது சரத்தில் கூறப்பட்டுள்ளதை அடுத்து இந்த ஓம்பட்ஸ்மன் ஆனவர் தனிப்பட்டு விசாரணை நடத்தி பிரச்சனைகளை தீர்த்து வைக்க முடியும்.
- ✓ உறுப்பினர்கள்,அசோசியேஷன்கள், மற்றும் ஐபிஎல் பிரான்சிஸ் போன்றவர்களின் பிரச்சனைகளை இவர் கவனத்திற்கு கொண்டு வரப்படும்.

5) ஏசியன் ஹாக்கி கூட்டமைப்பின்(**Asian Hockey Federation)** துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?

**A]** மரியம்மா கோஷி

**B]** ஆஷிமா அலி

**C]** ராஜீந்தர் சிங்

**D]** முகம்மது முஷ்டாக் அகமத்

- ✓ முகம்மது முஷ்டாக் அகமத் என்பவர் ஆசிய ஹாக்கி கூட்டமைப்பின் புதிய துணை தலைவராக 4 ஆண்டு காலங்களுக்கு ஜப்பானில் உள்ள **AHF** காங்கிரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ ஆஷிமா அலி என்பவர் ஏசியன் ஹாக்கி கூட்டமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ முகம்மது முஷ்டாக் அகமத் ஹாக்கி இந்தியாவின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார். மேலும் ஆஷிமா அலி ஜம்மு காஷ்மீர் தேசிய கூட்டமைப்பின் துணை தலைவராகவும் பதவி வகிக்கிறார்.
- ✓ ஏசியன் ஹாக்கி கூட்டமைப்பின் நிர்வாக குழுவினர் கண்டம் தழுவிய கூட்டமைப்பை ஒருங்கிணைப்பதுடன் **CEO,** தொழில்சார்ந்த ஊழியர்கள், மற்றும் கூட்டமைப்பின் கமிட்டிகளை நிர்வகிப்பார்கள்.

6) "முக்கிய மந்திரி யுவ சுவபீமான் யோஜனா" என்ற புகழ்பெற்ற திட்டத்தை எந்த மாநில அரசாங்கம் அமல்படுத்தியது?

**A]** ஜார்க்கண்ட்

**B]** ராஜஸ்தான்

**C]** சட்டிஸ்கர்

**D]** மத்திய பிரதேஷ்

- ✓ மத்திய பிரதேச மாநிலத்தின் முதல் அமைச்சர் கமல்நாத் புகழ்பெற்ற முக்கிய மந்திரி யுவ சுவபீமான் யோஜனா என்னும் திட்டத்தை அந்த மாநிலத்தில் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம்

பொருளாதாரத்தில் பின் தங்கிய நகர்புறத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 100 நாள் வேலை வாய்ப்பை உறுதி செய்கிறது.

- ✓ மேலும் அரசாங்கத்தால் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.
- ✓ 21 முதல் 30 வயதுக்குட்பட்ட குடும்பத்தின் ஆண்டு வருமானம் 2 லட்சத்திற்கும் குறைவாக உள்ள இளைஞர்களே இந்த திட்டத்தால் பயனடைய முடியும்.

**7) 2019** ஆம் ஆண்டிற்கான மெடிக்கல் பேர் இந்தியா **(Medical fair India)** என்ற மருத்துவ கண்காட்சி எங்கே தொடங்கப்பட்டது**?**

**A]** புதுடில்லி

**B]** புவனேஸ்வர்

**C]** ராஞ்சி

**D]** புனே

- ✓ கடந்த பெப்ரவரி மாதம் **21**ஆம் தேதி, **2019** ஆம் ஆண்டுக்கான மெடிக்கல் பேர் ஆஃப் இந்தியா என்ற மருத்துவ கண்காட்சி புதுதில்லியில் நடந்தது. இதில் **25** க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியாளர்கள், மருத்துவத் துறை வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.
- ✓ **Messe Dusseldorf India** என்ற கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் நிறுவனம் இந்த மூன்று நாள் கண்காட்சியை நடத்தியது.
- ✓ இந்த கண்காட்சியானது மருத்துவத் துறை வல்லுநர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே ஒரு பாலத்தை ஏற்படுத்துவதாக அமையும். இதன் மூலம் மருத்துவ மற்றும் சுகாதார துறையில் உள்ள சவால்களையும் சிக்கல்களையும் கலந்து பேசி தீர்வு காண முடியும்.

**8)** சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட "பரம் ஷிவே" எந்த துறையுடன் தொடர்புடையது**?**

**A]** ஏவுகணை

**B]** செயற்கைக்கோள்

**C]** சூப்பர் கம்ப்யூட்டர்

D] ராக்கெட்

- ✓ **IIT-HU** வில் உருவாக்கப்பட்ட **833** டெட்ரா ப்ளாப் **(Tetra flop)** திறன் கொண்ட பரம் ஷிவே எனப்படும் சூப்பர் கம்ப்யூட்டர் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் **(National Super computing)** திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட இந்த மீத்திறன் கொண்ட கணினி **32.5** கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும்.
- ✓ இந்தக் கணினியின் **40** சதவீத ஆற்றலை நவோதயா வித்யாலயா மாணவர்கள் பயன்படுத்திக் கொள்வர்.
- ✓ இந்த நிறுவனம் அன்றாடம் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளான பாசன திட்டம், போக்குவரத்து மேலாண்மை, சுகாதாரம், மருத்துவம், மலிவான மருந்துகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் விதமாக இந்த கணினியை பயன்படுத்த இயலும்.
- ✓ இந்தக் கணினி இரண்டாம் கட்ட சேமிப்பாக **(Secondary storage) 1 peta byte** பெற்றுள்ளது. மேலும் **CPU** மற்றும் **GPU** உடன் **1 DDR4 RAM- 384 GP** களை கொண்டது.
- ✓ இந்தியாவின் முதல் சூப்பர் கம்ப்யூட்டர் ஆன **PARAM - 8000, 1991** இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ இந்தியாவின் **IITM Prathyush, NCMRWF** வில் **MIHIR, IISC** ல் **SERC- Cray** என்ற சூப்பர் கம்ப்யூட்டர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**9) NERTPS** திட்டத்தின் கீழ் இந்தியாவின் எந்த வடகிழக்கு மாநிலம் **Integrated large scale Eri farming** (பெரிய அளவிலான ஒருங்கிணைந்த எரி பண்ணை) தொடங்கியது ?

**A]** அருணாச்சலப் பிரதேசம்

**B]** நாகாலாந்து

**C]** அசாம்

**D]** திரிபுரா

- ✓ மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் அருணாச்சல பிரதேச மாநிலம் இட்டாநகரில் **NERTPS** திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான ஒருங்கிணைந்த எரி பண்ணையை தொடங்கி வைத்தார்.
- ✓ **(NERTPS - North East region textile promotion scheme-** வடகிழக்கு பிராந்திய ஜவுளித்துறை தரமுயர்த்தல் திட்டம்**).**

- ✓ எரி என்னும் பட்டு வகை உற்பத்தியை மேம்படுத்தும் விதமாக இந்தத் திட்டம் **5** மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ அவை பம்பரே, கிழக்கு கமேங், சியாங், கிழக்கு மற்றும் மேற்கு சியாங் ஆகும்.
- ✓ சமர்த் திட்டத்தின் **(Samarth Scheme)** கீழ் எரி பட்டு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் நெசவாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.கூடுதலாக இந்திய அரசாங்கம் **NERTPS** கீழ் பயனடையும் **4000** பயனாளிகளுக்கு நிதி உதவியும் அளிக்க திட்டமிட்டுள்ளது. இளைஞர்களின் திறனை மேம்படுத்தி ஜவுளித் துறையில் அதிக வேலை வாய்ப்பினை பெருக்குவதே சமர் திட்டத்தின் நோக்கமாகும்.

**10) கீழ்க்காணும் எந்த பொதுத்துறை நிறுவனம் Atmospheric Water Generator என்ற கருவியை Aero India 2019 நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்தியது?**

A] BDL

B] BEML

C] HAL

**D] BEL**

- ✓ இந்தியாவின் நவரத்தின அந்தஸ்து பெற்ற பாதுகாப்பு பொதுப்பணி துறை நிறுவனமான பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் **(BEL)** வளிமண்டலத்தில் இருந்து நீரை எடுக்கும் புதிய வகை ஜெனரேட்டரை ஏரோ இந்தியா கண்காட்சி **2019**ல் அறிமுகப்படுத்தியது. பெருகி வரும் குடிநீர் பற்றாக்குறையை சரி செய்யும் நோக்கில் இந்த கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதத்தில் இருந்து நீரைப் பிரித்து எடுத்து அதனை சுத்திகரித்து வழங்கும். இதற்காக வெப்பப் பரிமாற்றத்தை கையாள்கிறது.
- ✓ மேலும் இந்தக் கருவி தனிமபடுத்தும் அலகின் மூலம் சுத்திகரித்த நீருடன் தனிமங்களை கலந்து பருக தகுந்த நீராக மாற்றி அமைக்கிறது.
- ✓ இந்த இயந்திரம் நிலையான இடங்களிலும் நகரும் வடிவங்களிலும் நிறுவப்படலாம்.
- ✓ ஒரு இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு **30** லிட்டர், **100** லிட்டர், **500** லிட்டர் மற்றும் **1,000** லிட்டர் நீரை வளிமண்டலத்திலிருந்து பெற இயலும். பொது இடங்கள், சுகாதாரம் மற்றும் மருத்துவ மனைகள், பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்கள், கடற்கரை எண்ணெய் ஆலைகள், ராணுவத்

தளவாடங்கள், குக்கிராமங்கள், தகவல் தொடர்பு இல்லாத இடங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் இந்த கருவியை நிறுவ முடியும் **CSIR-IICT** மற்றும் ஹைதராபாத்தை தலைமையிடமாகக் கொண்ட மைத்திரி என்னும் ஸ்டார்ட்-அப் நிறுவனத்துடன் இணைந்து **bel** இந்திய நிறுவனம் இதை தயாரித்துள்ளது.

winmeen.com